முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.6.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், புதுடெல்லி Swaniti Initiative மற்றும் London School of Economics and Political Science இணைந்து நடத்துகின்ற லண்டன் கால நிலை மாற்றம் வார விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி நடைபெறுகின்ற தமிழ்நாட்டில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு, மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்க லண்டன் செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து – நடராசன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் தலைமை அலுவலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் “நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு” நான்காண்டு சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டு, பணியாளர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பால சாகித்ய புரஸ்கார் – யுவ புரஸ்கார் விருதுகளுக்குத் தேர்வாகியுள்ள

எழுத்தாளர்கள் சரவணன் - லட்சுமிஹர்க்கு வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன்.20-

பால சாகித்ய புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர் சரவணன் மற்றும் யுவ புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர் லட்சுமிஹர் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் குழந்தைகளுக்கு வலியுறுத்தும் ‘ஒற்றைச் சிறகு ஓவியா’ நூலுக்காக சாகித்ய அகாதமியின் பால சாகித்ய புரஸ்கார் பெறத் தேர்வாகியிருக்கும் எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் அவர்களுக்கு எனது மனம்நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊஞ்சல், தேன்சிட்டு, கனவு ஆசிரியர் என தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் முன்னெடுப்புகளிலும் திறம்படப் பங்காற்றி வரும் விஷ்ணுபுரம் சரவணன் அவர்கள் இந்த விருதுக்குத் தேர்வாகி இருப்பது கூடுதல் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

அதேபோல, ஆழமான தம் எழுத்துகளுக்கான அங்கீகாரமாகக் ‘கூத்தொன்று கூடிற்று & பிற கதைகள்” சிறுகதைத் தொகுப்புக்காக யுவ புரஸ்கார் பெறத் தேர்வாகி இருக்கும் லட்சுமிஹர் அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருது பெறும் இரு இளம் படைப்பாளிகளும் மென மேலும் தமிழைச் செழுமைப்படுத்தும் ஆக்கங்களை தொடர்ந்து அளிக்க வேண்டும் என வாசிப்பினை பெரும் இயக்கமாக முன்னெடுத்து வரும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்பி., சி.என்.அண்ணாதுரை.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி மற்றும் டாக்டர் மாசிலாமணி, டாக்டர் மாலதி, எஸ்.பி.மணிமாறன், பா.செந்தமிழ்ச்செல்வன், ஊரல் அண்ணாதுரை, ஆர்.டி.அரசு, கே.செந்தில்குமார் மற்றும் இரா.ஸ்ரீதரன், கு.கருணாநிதி, எஸ்.பன்னீர்செல்வம், க.சௌந்தரராசன், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்க தி.மு.க. அரசை பழனிசாமி வலியுறுத்துவது விந்தையிலும் விந்தை!

மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா?

அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

தலைவர் எடப்பாடி பழனிசாமி.

சென்னை, ஜூன். 20-

மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைக்க தி.மு.க. அரசை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்துவது விந்தை என்றும், மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா என்றும் குறிப்பிட்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

‘மா’ சாகுபடி விவசாயிகளுக்காக திமுக அரசைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்திருக்கிறது அதிமுக. மா விவசாயிகள் மட்டுமல்ல அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசு! பழனிசாமி செய்தித் தாள்களைக் கூடப் படிக்காமல் அரை வேக்காட்டுத் தனமாக அறிக்கை விடுகிறார் என தமிழ்நாடு முதலமைச்சர் கூறியதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி. உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெயரில் அரசின் மீது வீணான அவதூற்றைப் பரப்பியிருக்கிறார்.

ஒரு பிரச்சினை எழுந்தால் அதனை உடனடியாகக் கவனித்துத் தீர்வு காணும் நடவடிக்கையை திமுக அரசு மேற்கொண்டு வருகிறது. அப்படிதான் மா சாகுபடி விவசாயிகளின் கோரிக்கை விவகாரத்திலும் தலையிட்டு அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது. அதன் பிறகும் தன் இருப்பை காட்டிக் கொள்ளப் போராட்டம் அறிவித்து அரசியல் ஆதாயம் தேட முயல்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

கிருஷ்ணகிரி , திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர் மற்றும் மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் மா சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 9.5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. வழக்கமாக 5 முதல் 6 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தியாகும் மா உற்பத்தி இந்த ஆண்டு பருவ நிலையின் சாதகத்தால் 8 மெட்ரிக் டன்னிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

மாம்பழக் கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மா சாகுபடி விவசாயிகள் இடையிலான முரண்பாடுதான் பிரச்சினைக்குக் காரணம். இது தொடர்பாகக் கடந்த 16ம் தேதி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், தோட்டக்கலைத் துறை இயக்குநர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள் ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர், மதுரை ஆகிய மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் மாம்பழக்கூழ் பதப்படுத்தும் நிறுவனங்கள் இடையே ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழக்கூழ் கையிருப்பு அதிகம் உள்ளதால், மாம்பழங்களைக் கொள்முதல் செய்யும் தேவை குறைந்துள்ளதாகப் பதப்படுத்தும் நிறுவனங்கள் சார்பில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தேவை குறைந்துள்ளதாலும் மா உற்பத்தி அதிகமானதாலும் விவசாயிகளிடமிருந்து உரிய விலைக்கு மா கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது என்றும் சொன்னார்கள். ஜூன் 20ம் தேதிக்கு மேல் விவசாயிகளிடமிருந்து மாம்பழங்களைக் கொள்முதல் செய்து கொள்வதாக பதப்படுத்தும் நிறுவனங்கள் அரசு அதிகாரிகளிடம் உறுதி அளித்துள்ளன.

மா சாகுபடி விவசாயிகளின் நலன் கருதி மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூராரகத்தினை விவசாயிகளிடம் இருந்து நியாயமான விலையில் கொள்முதல் செய்யவும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தினார்கள். வேளாண்மை உற்பத்தி ஆணையரும் அரசு செயலாளருமான தட்சிணாமூர்த்தி மாம்பழக் கூழ் நிறுவனங்களுக்கு உத்தரவிட்ட செய்தி நேற்றும் இன்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இத்தனைக்கும் பிறகு போராட்டத்தை அதிமுக நடத்துகிறது என்றால் அதற்கு அரசியல் காரணம் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

பிரச்சினைக்கு அரசு தீர்வு காணாவிட்டால் அதை எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக் காட்டலாம். ஆனால், தீர்வு கண்ட பிறகும் நடவடிக்கை எடுத்துவிட்ட பிறகும் உண்ணா விரதப் போராட்டத்தை அறிவிப்பது எதற்காக? மாம்பழங்கள் கொள்முதல் செய்யப்படும் எனச் சொல்லப்பட்ட 20ம் தேதியில் உண்ணாவிரதப் போராட்டத்தை பழனிசாமி அறிவித்தது அரசியல் ஆதாயம் பெறத்தானே!

‘இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை’ என பழனிசாமி அறிக்கையில் பச்சைப் பொய் சொல்வதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ‘மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியை 12 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைக்க வேண்டும்’ என திமுக அரசை பழனிசாமி வலியுறுத்துவது எல்லாம் விந்தையிலும் விந்தை. அதற்கான அதிகாரத்தை வைத்திருக்கும் ஒன்றிய பாஜகவைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடாமல் அறிக்கை வெளியிடுவதன் மூலம் விவசாயிகளை வஞ்சிக்கும் மோடி அரசைக் காப்பாற்றி தனது அடிமை விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார். ஒன்றிய அரசு என்றால் கொஞ்சல், மாநில அரசு என்றால் எரிச்சல் என இரட்டை வேடம் போடும் கபட வேடதாரிதான் பழனிசாமி!

‘மா’ விவசாயிகளின் நலனை மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசுதான். வேளாண் துறைக்குத் தனிப் நிதிநிலையை அறிவித்து உழவர் குடி மக்களின் வாழ்வை உயர்த்தப் பாடுபட்டு வரும் திராவிட மாடல் அரசை இந்த அபத்தப் பொய்களால் எல்லாம் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (18.06.2025) புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மாசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கினார். உடன் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே. எஸ். விஜயன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் அஷிஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சரின் உத்தரவுப்படி

டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்!

புதுடெல்லி, ஜூன்.20-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (18.06.2025) புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில், சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக் கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவி யாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கினார்.

புதுதில்லி ஜங்புரா பகுதியில் அமைந்திருந்த மதராசி கேம்ப் என்று அழைக்கப்பட்ட குடிசைப் பகுதியில் வசித்து வந்த 370 தமிழ் குடும்பத்தினர் அங்கிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இடம் பெயர்ந்த தமிழ் குடும்பத்தினருக்கு அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க உதவியாக இருக்கும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 12000 மதிப்பிலான (ரூ.8000 நிதி உதவி மற்றும் ரூ.4000 மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள்) தொகுப்பையும் வழங்க ஆணையிட்டதன் பேரில், நேற்று (18.06.2025) இடம் பெயர்ந்த தமிழ் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் பணி துவங்கியது.

பயனாளிகளின் விபரங்களை சரிபார்த்து ஆவணங்களை பெறுவதற்காக 7 கவுண்டர்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு அதிக சிரமம் இல்லாமல் ஆவணங்கள் சரி பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பயனாளிகள் அனைவருக்கும் பிரத்யோக வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவரவர் தற்போது தங்கியிருக்கும் இடத்தில் இருந்து அழைத்து வரப்பட்டு திரும்பவும் கொண்டு சென்று விடப்பட்டார்கள். பயனாளிகள் நிவாரண தொகு ப்பை பெற்றுக்கொண்டு வீடு திரும்பும் வரை அவர்களுக்கான உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தரப்பட்டிருந்தது.

அரசு ஆணையின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபாய் 8000 தொகையை அவர்களது வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் வங்கிக் கணக்கு இல்லாத பயனாளிகளுக்கு உடனடியாக தமிழ் நாடு இல்லத்திலேயே வங்கி முகவர்களை வரவழைத்து ஜன் தான் சேமிப்பு கணக்கினை துவக்கி அந்த வங்கி கணக்குகள் மூலமாக பண பரிமாற்றம் செய்யப்பட்டது. வயதான நோயிற்று வீட்டிலிருந்து வெளிவர இயலாத பயனாளிகள் குறித்த கணக்கெடுப்பு நடந்து வருகிறது அத்தகைய பயனாளிகளுக்கு அவர்களது நிவாரணத் தொகுப்பினை அவர்கள் தங்கி இருக்கும் இடத்திற்கே சென்று வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக அமைச்சர் சா.மு.நாசர் புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

ஜான்பூர் பகுதிகளில் வசிக்கின்ற 370 குடும்பங்க ளுக்கு - பரப்புள்ள ஆற்றங்கரையில் நீர்பரப்பினால் ஏற்பட்ட இன்னல்களால் ஏறக்குறைய 370 குடும்பங்க ளுக்கு இன்றைய தினம் நீதிமன்ற ஆணைப்படி அவர்களுடைய வீடுகள் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்டதை அறிந்த முதல்வர் அவர்கள் “உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற அடிப்படையில் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டப்படவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில், உடனே இங்கு இருக்கின்ற நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் நாடாளுமன்ற உறுப்பினர்டி.ஆர். பாலு அவர்களுக்கும், டெல்லி சிறப்புப் பிரதிநிதி அருமை நண்பர்ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும் உத்தரவு பிறப் பித்து, உடனே டெல்லி முதல்வரை சந்தித்து அவர்களுக்கு உதவிடுமாறு ஆணை பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையில், அங்கு டெல்லியில் இருக்கின்ற முதலமைச்சரை சந்தித்தபோது, சரியான ஒரு நேசக் கரம் நீட்டாத காரணத்தால், முதல்வர் அவர்களே அவர்களுக்கு நேசக்கரம் நீட்டவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில், அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு அவர்கள் இங்கிருந்து தமிழகம் வருவார்களேயானால், அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்ற உத்தரவாதத்தையும், இப்போது அங்கு இருப்பவர்களுக்கு முதல்கட்டமாக உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவி யாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கி, எங்களையும் அனுப்பி, அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் வந்திருக்கிறோம். அந்த நிவாரணப் பொருட்களை எல்லாம் வழங்கியிருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் அஷிஷ் குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, அண்ணா சாலை, தேவநேய பாவணர் நூலக கட்டிடத்தில், நேற்று முன்தினம் (18.06.2025) தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவராக டாக்டர் திப்பம்பட்டி வி. ஆறுச்சாமி பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உப தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைமை செயல் அலுவலர் கோவிந்தராஜுலு, (ஓய்வு) மற்றும் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.